# பாரதியார்



**முன்னுரை** :-

மகாகவி பாரதியார் தனது படைப்புகளின் மூலம் தமிழ்பற்றையும், விடுதலை உணர்வையும், பெண்ணின எழுச்சியையும், தன்னம்பிக்கையும், தேசப்பக்தியையும் மக்களிடம் வளர்த்தார். பாட்டுக்கொரு புலவன் பாரதியின் சிறப்புகளையும், வாழ்க்கை நிகழ்வுகளையும் இக்கட்டுரையில் காண்போம்.

**வாழ்க்கைக்குறிப்பு** :-

பாரதியார் 1882 - ஆம் ஆண்டு டிசம்பர் 11 - ம் நாள் எட்டையாபுரத்தில் பிறந்தார். பாரதியாரின் பெற்றோர் சின்னச்சாமி ஐயர், இலட்சுமி அம்மாள் ஆவர். பாரதியாரின் இயற்பெயர் சுப்பையா. பாரதியாரின் தந்தை ஒரு கணித மேதை. பாரதியார் இளமையிலேயே பாடல் பாடும் ஆற்றல் பெற்றவர். பாரதிக்கு 15 - வது வயதில் திருமணம் நடந்தது. பாரதியாரின் துணைவி பெயர் செல்லம்மாள். பாரதிக்கு தங்கம்மாள், சகுந்தலா என்ற இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர்.

**பாரதியாரின் இளமைப்பருவம்** :-

பாரதியார், தனது இளம்வயதிலேயே தமிழ் மீது மிகுந்த பற்று கொண்டிருந்தார். ஒருநாள் பாரதியின் தந்தை அவருக்கு கணக்கு ஒன்றைக் கொடுத்துச் செய்ய சொன்னார். பாரதி கணக்கு செய்யாமல், கவிதை பாடினார். பாரதியார் வேத சாஸ்திரங்களை இளமையிலே கற்றார். பாரதியார், எட்டையாபுரம் அரண்மனை புலவரானார். பாரதியார் தனது 11-வது வயதில் "**பாரதி**" பட்டம் பெற்றார். பாரதியார் தமக்கு தொழில், கவிதை, நாட்டிற்கு உழைத்தல் என்பதை தனது குறிக்கோளாகக் கொண்டு திகழ்ந்தார்.

**பாரதியாரின் இதழியல் பணிகள்** :-

பாரதியார் "சுதேசமித்திரன்" என்ற பத்திரிக்கையின் உதவி ஆசிரியராக பணியாற்றினார். பாரதியாரின் பத்திரிக்கைக் குரு சுப்பிரமணிய ஐயர் ஆவார். சுதேசமித்திரன் பத்திரிக்கையின் மூலம், மக்களின் மனதில் வீரத்தை ஊட்டினார். சுதேசமித்திரன் பத்திரிக்கையில் நாட்டின் அரசியல் நிலையை எடுத்துரைத்தார். பாரதியார் "சக்கரவர்த்தினி" என்ற பத்திரிக்கையில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எழுதியுள்ளார். பாரதியார், விஜயா, சூரியோதயம், கர்மயோகி, தர்மம் ஆகிய தமிழ் பத்திரிக்கைகளிலும், "பால" பாரதா என்ற ஆங்கில இதழிலும் பணியாற்றினார். பாரதி தனது வாழ்நாள் முழுவதும், பத்திரிக்கையாளராகவே திகழ்ந்தார். பிறமொழி இலக்கியங்களை மொழிபெயர்த்து, தமிழில் வெளியிட்டார். பத்திரிகைகளில் முதன் முதலில் கேலிசித்திரம் பயன்படுத்தியவரும் பாரதியார் தான். ஆங்கில அரசால் தடை செய்யப்பட பாரதியின் "இந்தியா" பத்திரிக்கை புதுவையில் வெளியானது.

**பாரதியாரின் விடுதலை உணர்வு** :-

பாரதியார் தனது பாடல்களின் மூலம் மக்களிடம் விடுதலை உணர்வை ஊட்டினார். தமிழகத்தில் வாழும் மக்கள் அனைவரும் எவ்வித பேதமின்றியும், ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடுமின்றி பழக வேண்டும் என்பதை பாரதி தனது கவிதைகள் வாயிலாக கூறியுள்ளார்.

மனிதர்கள் யாவரும் ஒரே மதம் என்பதை பாரதியார்,

**“ஏழை என்றும் அடிமை என்றும்**
**எவனும் இல்லை ஜாதியில்**
**இழிவு கொண்ட மனிதர் என்பது**
**இந்தியாவில் இல்லையே”**

மக்களிடம் தன்னம்பிக்கை ஊட்டும் வகையில் பாரதியார்,

**“அச்சமில்லை அச்சமில்லை**
**அச்சம் என்பது இல்லையே**
**இச்சகத்துள்ளோர் எல்லாம்**
**எதிர்த்து நின்ற போதிலும்**
**அச்சமில்லை அச்சமில்லை**
**அச்சம் என்பது இல்லையே”**

விடுதலை போராட்டத்திற்கு நாட்டுமக்களைத் தட்டி எழுப்பும் வகையில் பாரதியார்,

**“பாரததேசம் என்று பெயர் சொல்லுவார் — மிழப்**
**பயம் சொல்லுவார் துயர்ப்பகை வெல்லுவார்”**

இத்தகைய பாடல்களின் மூலம் பாரதியார் விடுதலை உணர்வை வெளிக்காட்டியுள்ளார்.

**பாரதியாரின் தமிழ்ப்பற்று** :-

பாரதியார், தமிழ்மொழியின் மீது மிகுந்த பற்றுடையவர். தமிழ்த்திருநாட்டினை வாழ்த்தி, பாரதியார் பலப்பாடல்கள் பாடியுள்ளார்.

**“செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்**
**தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்**
**தந்தையர் நாடு என்ற பேச்சினிலே - ஒரு**
**சக்தி பிறக்குது முச்சினிலே”**

என்ற பாடலடிகளின் மூலம், பாரதியாரின் தமிழ்பற்றை அறியலாம்.


www.kids.noolagam.com

**பாரதியார் போற்றும் பெண்ணியம்** :-

பாரதியார், பெண்கள் கல்விச் செல்வம் பெறுவதை மிகவும் விரும்பினார். பெண் விடுதலை பெறவும், பெண்களின் அறியாமை இருள் நீங்கவும் பாடுபட்டார். பாரதியார் பெண்விடுதலை குறித்து,

**"வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற**
**விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.**
**பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்;**
**எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்**
**இளைப்பில்லை காணென்று கும்மியடி!"**

பாடியுள்ளார்.

**பாரதியாரின் வாழ்க்கை நிகழ்வுகள்** :-

**1882** - பிறப்பு.
**1889** - தொடக்கக்கல்வி.
**1893** - பாரதி பட்டம்.
**1894** - உயர்நிலைக்கல்வி.
**1897** - திருமணம்.
**1904** - மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியர் பணி.
**1904** - "**சுதேசமித்திரன்**" பத்திரிக்கையின் ஆசிரியர்.
**1905** - "**சக்கரவர்த்தினி**" மாதப் பத்திரிக்கையின் ஆசிரியர்.
**1906** - "**இந்தியா**" வார இதழின் பொறுப்பாசிரியர்.
**1912** - கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதல் பாகம்.
**1921** - மறைவு.

**பாரதியாரின் புனைப்பெயர்கள்** :-

பாரதி, மகாகவிஞர், தேசியக்கவிஞர், அமரக்கவிஞர், முறுக்குமீசைக்காரன், பாட்டுக்கொரு புலவர், விடுதலைவீரர், சமூக சீர்திருத்தவாதி, முண்டாசுக்கவிஞர் போன்ற புனைப்பெயர்களுக்கு சொந்தக்காரர் நம் பாரதியார்.

**பாரதியார் கற்றறிந்த மொழிகள்** :-

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், பிரெஞ்சு, தெலுங்கு, வங்காளம்.


www.kids.noolagam.com

**பாரதியார் இயற்றிய நூல்கள்** :-

கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாப்பா பாட்டு, தேசிய கீதங்கள், பாஞ்சாலிசபதம், சந்திரிகையின்கதை, பகவத் கீதை, ஞானரதம், புதிய ஆத்திசூடி, வந்தேமாதரம், தாயின்மணிக்கொடி, கனவு, அக்கினிக்குஞ்சு, புதுமைப்பெண், பெண்கள்வாழ்க, பெண் விடுதலை, முரசு, தமிழ்த்தாய், செந்தமிழ்நாடு, பாரத சமுதாயம், பாரத மாதா, பாரத நாடு, பாரத தேசம் போன்ற எழுச்சி ஊட்டக்கூடிய பல்வேறு நூல்களை பாரதியார் இயற்றியுள்ளார்.

**முடிவுரை** :-

பாரதியார், விடுதலைப்போராட்டத்திற்கும், பெண்விடுதலைக்கும், சாதி பாகுபாடு ஒழியவும் மிகவும் பாடுபட்டார். பாரதியாரின் கவிதைகள், சிறுகதைகள், பாடல்கள் அனைத்தும் புரட்சிகரமானவையாகும். பாரதியாரின் எழுத்தாற்றல் மக்களிடம் தேசப்பற்றினை ஊட்டியது. பாரதியார் 1921 - ஆம் ஆண்டு செப்டம்பர் 12 - ம் நாள் இறைவனடி சேர்ந்தார்.


www.kids.noolagam.com